இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 12.12.2025

# குருமூர்த்தியாரின் காரணம்!

**எஸ்.** ஐ.ஆர்.நடவடிக்கைக்கு எதிராக தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்களில் எதிர்ப்பு எழுந்து வரும் நிலையில் அதற்கான ஒரு காரணத்தை துக்ளக் ஆசிரியர் குருமூர்த்தி, 'தினமணி' பத்திரிக்கையில் கட்டுரையாகத் தீட்டி இருக்கிறார்.

**இந்தியாவில் சட்டவிரோதமாக வங்க தேசத்தவர்கள் குடியேறி வருகிறார்கள். அவர்களை நீக்குவதற்கான நடவடிக்கைதான் இது என்று சொல்லி இருக்கிறார். இப்படிச் சொல்பவர், தமிழ்நாட்டில் வங்க தேசத்தவர் எத்தனை லட்சம் பேர் குடியேறி இருக்கிறார்கள் என்று சொல்லி இருக்கிறாரா என்றால் இல்லை. அவர் சொல்லும் புள்ளிவிபரம், அவரது வாதத்துக்கு எதிராகவே அமைந்துள்ளது.**

"இந்தியாவில் வங்கதேசத்தைச் சேர்ந்த லட்சக்கணக்கானோர் சட்டவிரோதமாக ஊடுருவி வசிக்கிறார்கள் என்பதற்கு இரு கட்சிகளின் சாட்சியங்களும் உள்ளன. 2001- இன் இறுதியில் இந்தியாவில் சுமார் 1.2 கோடி சட்டவிரோத ஊடுருவல்காரர்கள் வசித்து வந்ததாக கடந்த 2004 ஜூலை 14 அன்று டாக்டர் மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு நாடாளுமன்றத்தில் தெரிவித்தது.

வெவ்வேறு மாநிலங்களுக்கான குறிப்பிட்ட எண்ணிக்கையை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் உள்துறை அமைச்சர் வெளியிட்டார். அஸ்ஸாமில் 50 லட்சம்; மேற்கு வங்கத்தில் 57 லட்சம்; பீகாரில் 4.79 லட்சம்; தில்லியில் 3.75 லட்சம்; திரிபுராவில் 3.25 லட்சம்; நாகாலாந்தில் 59,500; மேகாலயத்தில் 3,000 , மகாராஷ்டிரத்தில் 20,000.

2016-ஆம் ஆண்டில், தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மாநிலங்களவையில் அவர்களின் எண்ணிக்கை 2 கோடி என்று கூறியது.

எஸ்.ஐ.ஆர்-ஐ எதிர்க்கும் கட்சிகள் மற்றும் அரசியல்வாதிகளின் நோக்கம் தெளிவாக உள்ளது. நிச்சயமாக இதை அவர்களால் வெளிப்படையாகச் சொல்ல முடியாது; இத்தனை கோடி வங்கதேச மக்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்வது சட்ட விரோதமானது மற்றும் அரசியல் சாசனத்துக்கு எதிரானது; இதுதான் எஸ்.ஐ.ஆரில் உள்ள நன்மை" என்று இத்தனை நாட்கள் கழித்து கண்டுபிடித்து எழுதி இருக்கிறார் குருமூர்த்தி.

**குருமூர்த்தி சொல்லும் பட்டியலில் தமிழ்நாடு இருக்கிறதா? தமிழ்நாட்டில் எத்தனை லட்சம், எத்தனை ஆயிரம் வங்க தேசத்தவர்கள் ஊருடுவி இருக்கிறார்கள் என்று இந்தப் பட்டியலில் இருக்கிறதா? இல்லை.**

'வங்க தேசத்தவர்கள் வாக்களிக்க அனுமதிக்க வேண்டும்' என்று நாம் கேட்கிறோமா? யாராவது கேட்கிறார்களா? இல்லை.

உள்துறை அமைச்சர் அமித்ஷா, காட்டிய பூச்சாண்டியை குருமூர்த்தியும் இங்கு காட்டுகிறார். வாக்காளர் பெயர் நீக்கம் குறித்து பீகாரில் ராகுல்காந்தியும், தேஜஸ்வீயும் மிகப் பிரமாண்டமான பரப்புரைப் பயணத்தைச் செய்த போது, "இது முழுக்க முழுக்க ஊடுருவல்காரர்களைப் பாதுகாக்கும் யாத்திரை.

ஊடுருவல்காரர்களுக்கு வாக்களிக்கும் உரிமை அளிக்கப்பட வேண்டுமா? அவர்களுக்கு இலவச ரேஷன் வழங்கப்பட வேண்டுமா? அவர்களுக்கு வேலை வழங்கப்பட வேண்டுமா? வீடு வழங்கப்பட வேண்டுமா? ரூ. 5 லட்சம் வரையிலான காப்பீடு மூலம் இலவச சிகிச்சை வழங்கப்பட வேண்டுமா? நமது இளைஞர்களுக்காக அல்லாமல், வாக்கு வங்கி ஊடுருவல்காரர்களுக்காக வேலைவாய்ப்பை வழங்குகிறார் ராகுல் காந்தி. தப்பித் தவறி அவர்களின் அரசாங்கம் அமைந்துவிட்டால் பீஹாரின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஊடுருவல்காரர்கள் மட்டுமே இருப்பார்கள். எனவே, இது குறித்து வீடு வீடாகச் சென்று விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்" என உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசினார். அப்படி எந்த நிலைமையாவது தமிழ்நாட்டில் இருக்கிறதா?

**வாக்காளர் பட்டியல் சீர்திருத்தத்தையோ, சிறப்பு சீர்திருத்தத்தையோ செய்யக் கூடாது என்று சொல்லவில்லை. ஏன் அவசர அவசரமாகச் செய்கிறீர்கள், மழைக் காலத்தில் செய்கிறீர்கள், குழப்பமாகச் செய்கிறீர்கள், குளறுபடியோடு செய்கிறீர்கள், விண்ணப்பப் படிவங்களில் ஏன் குழப்புகிறீர்கள் என்றுதான் நாம் கேட்கிறோம். இதற்கு பதில் சொல்ல முடியாமல், 'ஊடுவல்காரர்களை நீக்கப் போகிறோம்' என்று பதில் சொல்கிறார்கள்.**

குருமூர்த்தி அடுக்கும் ஊடுருவல்காரர்கள் பட்டியலில் முதலில் இருக்கும் மாநிலம் அசாம். அங்கு 50 லட்சம் ஊடுருவல்காரர்கள் இருப்பதாக அவர் சொல்கிறார். அசாம் மாநிலத்தில் எஸ்.ஐ.ஆர். நடவடிக்கை இல்லையே? ஏன்?

**இரண்டாம் கட்ட வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தத்தை தேர்தல் ஆணையம் செய்யும் 12 மாநிலங்களின் பட்டியலில் அசாம் இல்லை. பா.ஜ.க. ஆளும் மாநிலம் என்பதால் இதனைச் செய்யவில்லை. அதுதான் உண்மை.**

அல்லது அசாம் மாநிலத்தில் எந்த ஊடுருவல்காரர்களும் இல்லையா?

கடந்த ஆகஸ்ட் மாதம் அசாம் மாநில முதலமைச்சர் ஹிமந்தா பிஸ்வா சர்மா, தனது மாநிலத்தில் ஊடுருவல்காரர்கள் இருப்பதை உறுதி செய்தார். ஸ்ரீபூமி மாவட்டத்தில் இருந்து 21 வங்கதேச ஊடுருவல்காரர்களை பாதுகாப்புப் படையினர் அண்டை நாட்டிற்கு திருப்பி அனுப்பியதாக அசாம் முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா, ஆகஸ்ட் 5 ஆம் தேதி சொல்லி இருக்கிறார்.

"இன்று நள்ளிரவில், தீய நோக்கங்களுடன் இந்தியாவுக்குள் நுழைந்த 21 சட்டவிரோத வங்கதேச ஊடுருவல்காரர்கள் விடுவிக்கப்பட்டு, ஸ்ரீபூமி எல்லையிலிருந்து அவர்கள் சேர்ந்த வங்கதேசத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்" என்று அசாம் முதலமைச்சர் 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டார். ஆகஸ்ட் மற்றும், அதற்கு முந்தைய மாதங்களில் மட்டும் 400 பேர் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதாகச் சொன்னார்."அடையாளம் காணுதல் மற்றும் திருப்பி அனுப்புதல் தொடரும்" என்று அவர் அறிவித்துள்ளார்.

சந்தேகத்திற்குரிய பலர் பல்வேறு சட்டவிரோத வழிகளில் தங்கள் பெயர்களை NRC-யில் சேர்த்துள்ளதாக மாநில அரசு கருதுகிறது என்றும் அசாம் முதலமைச்சர் ஹிமந்தா பிஸ்வா சர்மா ஜூன் 9 அன்று மாநில சட்டமன்றத்தில் தெரிவித்தார். இதுதான் அசாம் நிலைமை ஆகும். அங்கே தானே எஸ்.ஐ.ஆரை கடுமையாக நடத்தி இருக்க வேண்டும்?

"தேசிய குடிமக்கள் பதிவேடு (NRC) தயாரிப்பதால் அசாம் மாநிலத்தில் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தப் பணிகளை (SIR) மேற்கொள்ளவில்லை" என்று தேர்தல் ஆணையம் சொன்னது சந்தேகத்துக்குரியது. 2019 ஆம் ஆண்டு தேசிய குடிமக்கள் பதிவேட்டில் 19.6 லட்சம் பேரை நீக்கியதாகச் சொன்னார்களே தவிர இறுதிப்பட்டியல் வெளியாகவில்லை. அவர்கள் அனைவரும் அசாமில் இருந்து திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார்களா எனத் தெரியவில்லை. இந்த சூழ்நிலையில், 'அசாம் மாநிலத்துக்கு SIR பொருந்தாது' என்கிறார் தலைமைத் தேர்தல் ஆணையர்.

**இவர்களது நியாயங்கள், மாநிலத்துக்கு மாநிலம் மாறுகின்றன. அதனைத் தான் நாம் எதிர்க்கிறோம். மேலும், எல்லாவிதமான ஊடுருவல்காரர்களையும் நாம் எப்போதும் எதிர்த்தே வந்துள்ளோம்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.12.2025) தலைமைச் செயலகத்தில், இந்திய கடற்படை Vice Admiral சஞ்சய் பல்லா (Thiru. Sanjay Bhalla) அவர்கள் சந்தித்து, பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத்துறைச் செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர், இந்திய கடற்படை Rear Admiral சதிஷ் செனாய் (Thiru.Satish Shenai), கேப்டன் இஷான் பாண்டே (Thiru.Ishan Pandey), லெப்டினன்ட் ஆகாஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம்

# 376 நில அளவர்கள் தேர்வு செய்யப்பட்டு - பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, டிச.12–**

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 376 நில அளவர்கள் மற்றும் 100 வரைவாளர்கள் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.12.2025) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் நிலஅளவைப் பதிவேடுகள் துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 376 நிலஅளவர்கள் மற்றும் 100 வரைவாளர்கள் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கீழ் செயல்படும், நிலஅளவைப் பதிவேடுகள் துறையின் முக்கிய செயல்பாடுகள் நிலங்களை அளவிடுதல், உட்பிரிவு செய்தல், பட்டா மாற்றம் செய்தல், நில ஆவணங்களைப் பராமரித்தல், கணினிமயமாக்கல் மற்றும் நில உரிமை முறைகளை முறைப்படுத்துதல் போன்றவையாகும். இது வருவாய் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு, நிலம் தொடர்பான உரிமைகள், இருப்பிடம், அளவு மற்றும் வகை பற்றிய தகவல்களைப் பதிவு செய்து, வெளிப்படைத் தன்மையுடன் நிர்வகிப்பதை உறுதி செய்கிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த நில அளவைப் பதிவேடுகள் துறையின் பணிகள் தொய்வின்றி நடைபெறும் வகையில் கடந்த 4 ஆண்டுகளில் 800 நிலஅளவர்களும், 302 வரைவாளர்களும் புதியதாக நியமனம் செய்யப்பட்டு உள்ளனர். தற்சமயம் 2025ஆம் ஆண்டில் 376 நிலஅளவர்கள் மற்றும் 100 வரைவாளர்கள் காலிப் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு நேற்று முன்தினம் முதலமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இத்துறையின் கீழ் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் இணையவழி பட்டா மாறுதல் சேவையின் மூலமாக இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் உட்பிரிவு உள்ள பட்டா மாறுதல் இனங்களில் 61.77 இலட்சம் பட்டாக்களும், உட்பிரிவு அல்லாத பட்டா மாறுதல் இனங்களில் 79.25 இலட்சம் பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் உட்பிரிவு உள்ள பட்டா மாறுதல் இனங்கள் தீர்வு செய்ய 60 நாட்களும், உட்பிரிவு அல்லாத பட்டா மாறுதல் இனங்கள் தீர்வு செய்ய 31 நாட்கள் என இருந்து வந்த நிலையில், இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு உட்பிரிவு உள்ள பட்டா மாறுதல் இனங்கள் 30 நாட்களிலும், உட்பிரிவு அல்லாத பட்டா மாறுதல் இனங்கள் 14 நாட்களிலும் தீர்வு செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் அரசு நிலங்களில் நீண்ட காலமாக அனுபவம் செய்து வந்த ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் பல்வேறு திட்டத்தின் கீழ் இந்த அரசு பொறுப்பேற்ற நான்கரை ஆண்டுகளில் இதுவரை 20.41 இலட்சம் பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, நில நிருவாக ஆணையர் டாக்டர் கே.சு.பழனிசாமி, நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் தீபக் ஜேக்கப் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தென்பெண்ணையாற்றில்

# தொழிற்சாலை கழிவு நீர் கலப்பதை தடை செய்ய ஒன்றிய அரசின் நடவடிக்கை என்ன?

## மக்களவையில் — டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

*புதுடெல்லி, டிச.12-*

*திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் மக்களவையில், தென்பெண்ணையாற்றில், தொழிற்சாலை கழிவு நீர் கலப்பதை தடுக்க, ஒன்றிய அரசு ஏதேனும் முன்முயற்சிகளை எடுத்துள்ளதா? என்றும், கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்புகளை அரசின் கவனத்தில் உள்ளதா? என்றும், தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் தீர்ப்புகை முறையாக செயல்படுத் தப்படுகிறதா? என்றும், தேசிய ஆறுகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? என்றும், ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல்துறை இணையமைச்சர் கீர்த்தி வரதன் சிங்அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.*



*ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல்துறை இணையமைச்சர் அளித்த பதில் வருமாறு:-*

*மத்திய மாசுக் கட்டுப்பாட்டு ஆணையம் மாநில மாசுக் கட்டுப்பாட்டு ஆணையங்களுடன் இணைந்து செயல்பட்டு, 4922 இடங் களில் ஆற்று நீரின் தரத்தை ஆய்வு செய்கிறது என்றும், தொழிற்சாலை கழிவுகள், ஆற்றில் கலப்பதற்கு முன், அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளே கழிவு நீர் சுத்திகரிப்பை மேற்கொள்ள வேண்டும் என்றும், இதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் அந்தந்த மாநில மாசுக் கட்டுப்பாட்டு ஆணையங்களால் வழங்கப்படுகிறது என்று இணையமைச்சர் தெரிவித்தார்.*

*மேலும், தென் பெண்ணையாற்றின் இருபுறமும், ஒரு நாளைக்கு 13290 இலட்சம் லிட்டர்கள் கழிவு நீர் உருவாகின்றது என்றும், ஆனால் பெங்களூர் கழிவு நீர் வாரியத்தால், 8300 இலட்சம் லிட்டர்கள் அளவிற்கு மட்டுமே சுத்திகரிப்பு செய்யப்படுவதாகவும் ஒவ்வொரு மாதமும் முகலூர் பாலத்தில் மட்டுமே தென் பெண்ணை ஆற்று நீரின் தரம் ஆய்வு செய்யப்படுகிறது என்று தெரிவித்தார்.*

*தேசிய பசுமை ஆணையம், சென்னை அமர்ஷன் ஆணைப்படி, முகலூர் பாலத்தின் அருகில், தக்ஷினா பினாகினி என்றும் பகுதியில் ஆற்று நீரின் தரம் ஆய்வு செய்யப்பட்டதில், உயிரி ஆக்சிஜன் தேவை, ஒரு லிட்டருக்கு 111 மில்லி கிராம் என்ற அளவில் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது என்றும், கர்நாடகா மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும், தமிழக மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும் இணைந்து தென் பெண்ணையாற்றின் ஆறு இடங்களில் அதாவது, சென்னை சந்திரா பாலம், முகலூர் பாலம், சொக்கரசனாபள்ளி, கேலாரங்பள்ளி, மிட்டேசனபள்ளி பாலம் ஆகிய இடங்களில் ஆற்று நீரின் தரம் ஆய்வு செய்யப்பட்ட போது, உயிரி ஆக்சிஜன் தேவை, 52 மில்லி கிராம் என்ற அளவில் உள்ளது என்றும்,*

*கோள பாக்டீரியாவின் அளவு 100 ஆற்று நீரில் 79 இலட்சம் என்ற அளவில் உள்ளது என்று ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் இணையமைச்சர் கீர்த்தி வரதன் சிங், மக்களவையில், தி.மு.க. அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதில் அளித்துள்ளார்.*



மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் பேருந்து நிலையத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.2 கோடியே 96 லட்சம் மதிப்பீட்டில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். உடன் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார், அபுபக்கர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாவட்டக் கழக பொருளாளர் மகா அலெக்சாண்டர். குத்தாலம் நகர கழக செயலாளர் எம். சம்சுதீன், பேரூராட்சி தலைவர் சங்கீதா மாரியப்பன் மற்றும் பலர் உள்ளனர்.